தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 ஏப்ரல் 6, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

ஒருவர் தன் வாழ்க்கையின் ஒருநிலையில், தான் கற்ற கல்வியானது, அவருக்கு எல்லா நிலைகளிலும் சென்று பாதுகாப்பாக உதவுதலை உடையதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள். வினா எண் 301, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

301—

ஆராய்ச்சி மையம்

***45432—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், சேகோசர்வ் கூட்டுறவுச் சங்கத்தில் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 6

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

திரு. செ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலன் காக்கும் வகையில் சேகோசர்வ் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை வரியை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்தது மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், கூடுதல் விற்பனை வரி 2–1/2 சதவீதத்தை நீக்கியது மாண்புமிகு அம்மா அவர்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்ற பதிலைத் தெரிவித்திருக்கின்றார்கள். வரும் காலங்களில் விவசாயிகளுடைய நலன் கருதி, தாய்லாந்து போன்ற மேலைநாடுகளில் மரவள்ளிக் கிழங்கு மூலமாக ஆறு மாதத்தில் தரமான ஸ்டார்ச் கிடைக்கின்ற புதிய தொழில் யுக்தியை விவசாயத் துறையில் பயன்படுத்தி வருவதைப்போல், தமிழக விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் ஆறு மாத காலத்திற்குள் தரமான கிழங்கைப் பெற்றிட, புதிய தொழில் யுக்தியைப் பயன்படுத்திட சேகோசர்வ் மூலம் ஆராய்ச்சி மையம் உருவாக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், மேலைநாடுகளில் நவீன யுக்தியை அறிந்துவர—விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் குழு ஒன்று அறிந்து வந்து நடைமுறைப்படுத்திட—அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு நல்ல யோசனை தெரிவித்திருக்கிறார். மரவள்ளிக் கிழங்கின் மூலமாக ஸ்டார்ச் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விதத்திலேதான் இந்த சேகோசர்வ் ஆரம்பித்த பின்னர், ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களுக்கு 2.25 இலட்சம் மூட்டைகள் அடுக்கி வைக்கக்கூடிய, மொத்தமாக சேமித்து வைக்கக்கூடிய, ஒரு மிகப்பெரிய godown வசதியை 1991 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்துதந்தது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடன் கலந்து, அரசு ஆய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

2005 ஏப்ரல் 6]

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி மூட்டைகளை விற்பனை செய்ய சேகோசர்வ் என்னும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அரசு உருவாக்கிக் கொடுத்துள்ளது. ஒரு சில உற்பத்தியாளர்கள் வட மாநிலங்களில் நேரடியாக விற்பனை செய்பவர்கள். சிறிய factory–களிடம் உற்பத்தி செய்த ஜவ்வரிசியை விலைக்கு வாங்கி, விற்பனை வரி ஏய்ப்பு செய்து, தாங்கள் உற்பத்தி செய்ததாகக் கணக்கில் எழுதி, வட மாநிலங்களில் அவர்களது depot transfer என எடுத்துச் சென்று வரி ஏய்ப்பு செய்து வருகிறார்கள். எனவே, நேரடியாக வட மாநிலங்களில் விற்பனை செய்து, விற்பனை வரி ஏய்ப்பு செய்துள்ள வியாபாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 7, 8 மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுபோன்று வரி ஏய்ப்பு செய்யக்கூடிய இந்த மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாளர்கள் யாராவது அந்தப் பகுதியிலே இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமேயானால், இதுபோன்ற தகவலை அரசுக்குத் தெரிவிப்பாரேயானால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே இயங்கிவருகின்ற சேகோசர்வ் என்ற கூட்டுறவு ஸ்தாபனம் மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றது. அங்கே விற்பனையாகக்கூடிய ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசிக்கு நல்ல விலை கிடைக்கின்றது. தற்பொழுது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்ற ஸ்டார்ச்சின் காரணமாக இங்கே விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்கின்றமுகத்தான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களுக்கு தாய்லாந்திலிருந்து இறக்குமதியாகும் ஸ்டார்ச்சுக்கு நூறு சதவீதம் இறக்குமதி வரியை விதிக்க வேண்டுமென்று கடிதம் எழுதியதற்காக சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட விவசாயிகளின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாயிகளுடைய கடனைத் தீர்த்து — 311 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டியைத் தீர்த்துவைத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு

நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுடைய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கிற்கு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செஸ் வரி விதிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளினுடைய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கிற்கு நல்ல விலை கிடைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி செஸ் வரியை நீக்குவதற்கு இந்தக் கூட்டத்தொடரிலேயே நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வியிலேயே குறிப்பிட்டிருக்கின்றபடி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும், முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், கலந்துபேசி, துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 302, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

302—

தேயிலை கொள்முதல்

***50283**—**திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் உற்பத்தியை அதிகரிக்க தனிக் கவனம் செலுத்தி, தேயிலையை நேரடியாகக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதி வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலை மற்றும் தேயிலைத் தூளை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்தால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்; அதனால் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பளம் கிடைக்கும்; உபயோகிப்பவர்களுக்கும் தரமான டீ தூள் நியாயமான விலையில்*